1974 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

குற்றாலத்தில் சுற்றுலா மாளிகை

***155 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலத்திற்கு வரும் ஏழை, நடுத்தர மக்கள் வசதிக்கென விடுதிகளைக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருமானம் உள்ளவர்களுக்கும் தங்க வசதிகள் உடையதாயிருக்கும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டவிருக்கும் சுற்றுலா மாளிகை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்தக் குற்றாலத்தில், நீர் விழ்ச்சி ஏற்படும் காலத்தில் ஒழுங்காகக் குளிக்க வசதியில்லாமல் இருக்கிற காரணத்தினால் அந்த அருவியின் ஓட்டத்தில் ஐயருவி போன்ற இடங்களில் எல்லாம் செயற்கை நீர்விழ்ச்சிகளை ஏற்படுத்தி, நெருக்கடியின்றி எல்லோரும் அதில் நீராடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்போதே அங்கே வசதியாக நீராட நகரியம் பல்வேறு திட்டங்களைச் செய்து வருகிறது. பழைய அருவி, புதிய அருவி, ஐயருவி, சிற்றருவி, புலியருவி ஆகியவற்றுக்கு ஆண்டாண்டு அதிகமானபேர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் நடுத்தர, ஏழை எளியவர்கள் அங்கே தங்க வசதியினை ஏற்படுத்தும் வகையில் சுற்றுலா வாரியம் 10 லட்சம் ரூபாயில் விடுதி ஒன்றினைக் கட்ட ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறது.

Harijans of Paramakudi Emaneswar village

***160 Q.—THIRU K. T. K. THANGAMANI :** Will the Hon the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that Harijans of Paramakudi Emaneswar were beaten and tortured during second week of June 1973;

(b) whether representations were received from Harijan representatives; and

(c) if so, the action taken in the matter?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) ஆம். திரு. சின்னப்பையன் என்ற ஒருவரிடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளது.

(உ) ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடையவும், உதவி காவல்துறைத் தலைவருடையவும் கருத்துரைகள் கோரப் பட்டன. முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள், தவறானவைகளாக இருப்பதாகக் காணப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல்: அங்கே அமைச்சர் அவர்களுக்கும், இலாக்காவினருக்கும் அந்தச் செய்தியினை அனுப்பிய பிறகு போலீஸ் துறையினர் அரிசனச் சேரிக்குள் புகுந்து அடித்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? உண்டென்றால் அதன்மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சின்னப்பையன் என்ற ஒருவரிடம் இருந்து புகார் தந்தி மூலம் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 21—4—1973 அன்று அரிசனங்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட தகராறுகளுக்குப் பிறகு, போலீஸ் எதுவும் அரிசனச் சேரிக்குள் புகுந்து துன்பம் விளைத்ததாக விவரம் இல்லை.

House-sites for Harijans in Tiruttani taluk

* 161 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in N. N. Kandigai in Tiruttani taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம். என். என். கண்டிகை கிராமத்தில் 45 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்காக நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சியினரால் 13—8—1973-ல் அவார்டு பாஸ் செய்யப் பட்டுள்ளது. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.